[1983 பிப்ரவரி 11

*திரு. சோ. அழகர்சாமி ; பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நம்முடைய சபையின் விதிகளின்படி 54-வது விதியின்கீழ் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அப்பாதுரை அவர்கள் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். வழக்கமாக இதற்கான பதிலை விவர அறிக்கையாக வைப்பது வழக்கம் ஆனால் இன்றைக்கு அம்மாதிரி எழுத்து பூர்வமான அறிக்கையை வைக்கவில்லையே, அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்கள் பல்லாண்டுகளாக சட்டமன்றத்தில் இருக்கக்கூடிய இனிய என் உடன்பிறப்பு சட்டத்தில் உள்ள விதிகளை நான் மனப்பாடம் செய்து வைத்துத்தான் இருக்கிறேன். விதிகள் என்றால் கால் அட்டென்ஷன் நோட்டீஸ் வந்தவுடனே, உடனடியாக நாம் பதிலை அளிப்பது. அந்தப் பதில் நீண்ட பதிலாக இருந்தால் பேரவைத் தலைவர் அவர்கள் நம்முடைய அவையின் நேரத்தை எடுத்துக் கொள்ள வேண்டாமென்று கருதி அறிக்கையாக வைத்து விடுங்கள் என்று சொல்வது வழக்கம், ஆனால், இது சுருக்கமாக இருக்கிறது. ஆகவே, சுருக்கமாக இருக்கக் கூடிய இந்த பதிலைக் கூட இங்கே அறிக்கையாக வைப்பது நியாயமாக இருக்காது. நீங்கள் என்ன வற்புறுத்த வேண்டுமென்றால், அவையிலே படிக்க வேண்டுமென்று வற்புறுத்தினால் நன்றாக இருக்கும். நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் அந்த முறையில்தான் வாதாடிக் கொண்டிருந்து இருக்கிறோம். எனவே, அவையிலே எந்த விதிகளையும் மீறவில்லை. இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான், நிதானமாக, ஒழுங்காகப் படித்து, ஒவ்வொருவருக்கும் கருத்து மனத்தில் பதிய வேண்டுமென்பதற்காக நிறுத்திப் படித்தேன். நிச்சயமாக அவர்கள் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் துணைக் கேள்வி கேட்டபொழுது நிச்சயமாக இதைப் புரிந்து கொண்டுதான் கேட்டிருக்கிறார்கள் என்பது நம்முடைய அவைக்கும் தெரியும். ஆகவே, இதிலே எந்தவிதமான ஒழுங்குப் பிரச்னையும் இருப்பதாகத் தெரியவில்லை,

8. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

டாக்டர் கே. பி இராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றத் துறையில் மதிப்பீட்டுக் குழுத் தலைவன் என்ற முறையில், பாசனத் துறை பற்றி மதிப்பீட்டுக் குழு அளித்த பரித்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் பதினைந்தாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.